**உடுமலைப்பேட்டை நகராட்சி**

**12.7.2018 ம் தேதிய சாதாரணக்கூட்ட மன்ற நிரல்**

| Sl No | MCR No | Subjects in Agenda | Decision of the council |
|---|---|---|---|
| **1** | 625 | கோவை தேசிய நெடுஞ்சாலை கோட்டம் மற்றும் உட்கோட்டத்திற்கு உட்பட்ட திண்டுக்கல் பெங்களூர் தேசிய நெடுஞ்சாலை (209) கி.90/6ல் உடுமலைப்பேட்டை பஸ்நிலையம் அருகில் பயணிகள் தேசிய நெடுஞ்சாலை கடந்து செல்ல ஏதுவாக கல்பனா சாலை வழியாக வரும் பொதுமக்கள் கிழபுறமாக மேலேறி தென்வடலாக சென்று கிழபுறமாக கீழிறிங்கி பேருந்து நிலையத்தின் மையப்பகுதியில் உள்ள நடைபாதை வழியாக பேருந்து நிலையம் சென்றடையும் விதமாக ரூ.1.54 கோடி மதிப்பீட்டில் நடைபாதை மேம்பாலம் (Foot Over Bridge ) அமைக்க பணி துவங்கப்பட்டுள்ளதாகவும், இதற்காக தேசிய நெடுஞ்சாலையில் வலதுபுறம் நடைபாதையை ஒட்டி அமைந்துள்ள நகராட்சிக்கு சொந்தமான கடைகள் உள்ள 6.4மீ நீளம் x 7.6 மீ அகலம் மொத்தம் 48.64 சமீ ( 523.40 ச.அடி) இடத்தினை ஒதுக்கீடு செய்யுமாறும் அவ்விடத்திலுள்ள தற்காலிக கூரைகளால் அமைந்துள்ள கடைகளை அகற்றி கொடுக்குமாறும் தேசிய நெடுஞ்சாலை உத.வி கோட்டப்பொறியாளர் கோவை அவர்களின் 25.6.2018ம் தேதிய கடிதம் திட்டப்பணிகள் (2017–18) இவஅ / எண்ணிட்ட கடிதத் தில் தெரிவிக்கப்பட்டுள்ளது,<br>இதன்படி நகராட்சியின் மூலம் குத்தகைக்கு விடப்பட்டுள்ள காலியிடத்தில் அமைந்துள்ள மேற்படி நகராட்சி கடைகளில் 6.4மீ நீளம் x 7.6 மீ அகலம் = 48.64 ச.மீ (523.40 சஅடி )அளவுள்ள இடத்தினை நடைபாதை மேம்பாலம் அமைக்க ஒதுக்கீடு செய்யவும் அவ்விடத்திலுள்ள தற்காலிக கூரைகாளால் அமைந்துள்ள கடைகளை அகற்ற நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் அனுமதி பெற்று மேல்நடவடிக்கை தொடர மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக் குறிப்பு :–** அனுமதிக்கலாம்<br>**ந.க.எண் / /** | அலுவலகக் குறிப்பு அங்கீகரிக் கப்பட்டது. |
| **2** | 626 | அரசாணை (நிலை) எண். 59, நநி (ம) குவ துறை நாள். 25.07.2006ல் தெரிவிக்கப்பட்டபடி நகராட்சி பகுதியில் உள்ள அனுமதியற்ற மனைப்பிரிவுகளை வரன்முறைப்படுத்தும் நடவடிக்கையாக உடுமலைப்பேட்டை நகராட்சியில் 1992க்கு முன்பு நகர் ஊரமைப்பு துறையால் தொழில்நுட்ப ஒப்புதல் வழங்கப்பட்ட 28 அங்கீகரிக்கப்பட்ட மனைப்பிரிவுகளில் பூங்கா, பொது ஒதுக்கீடுகள் மற்றும் சாலைகளை நகராட்சி வசம் ஒப்படைப்பு செய்ய வேண்டும் என்ற நிபந்தனையுடன் நகராட்சியால் ஒப்புதல் வழங்கப்பட்டது. மேற்காண் 28 மனைப்பிரிவுகளின் உரிமைதாரர்கள், மனைப்பிரிவுகள் உள்ள பூங்கா, பொது ஒதுக்கீடுகள் மற்றும் சாலைகளை நகராட்சி வசம் ஒப்படைப்பு செய்யாததால் அம்மனைப்பிரிவுகளைஅனுமதியற்ற மனைப்பிரிவுகளின் பட்டியலில் சேர்க்கப்பட்டு அரசாணை (நிலை) எண். 59, நநி (ம) குவ துறை நாள். 25.07.2006ன்படி கட்டணம் வசூலிக்கப்பட்டு வரன்முறைப்படுத்தப்பட்டது.<br>நகர் ஊரமைப்பு துறையினரால் தொழில்நுட்ப அனுமதி வழங்கப்பட்டுள்ள 28 அங்கீகரிக்கப்பட்ட மனைப்பிரிவுகளுக்கு அரசாணை (நிலை) எண். 78 மற்றும் அரசாணை (நிலை) 172ன்படி நகர் ஊரமைப்பு துறையால் வரன்முறைப்படுத்தப்பட்டதாக வரன்முறைப்படுத்தி உத்தரவு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக் குறிப்பு :–** மன்றம் அனுமதி வழங்கலாம்<br>ந,க.எண். 4415/2017/எப்1 | அலுவலகக் குறிப்பு அங்கீகரிக் கப்பட்டது. |

| | | | |
|---|---|---|---|
| **3** | 627 | நகராட்சி நிர்வாக ஆணையாளர், சென்னை அவர்களின் ந.க.எண்.47718/2013/UGSS-2 Dated:25.06.2018 கடிதத்தில் தெரிவித்துள்ளபடி பாதாள சாக்கடை கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்தில் மாதத்திற்கு இரண்டு முறை Influent and Effluent-யை சோதனை செய்து அறிக்கையினை பதிவு செய்ய தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி ஒரு மாதத்திற்கு இரண்டு முறை சோதனை செய்து அறிக்கை பெற தொகை ரூ.16000/- செலவினம் ஆகிறது. ஒரு வருடத்திற்கு உத்தேச செலவினம் (ரூ.16000x12) ரூ.1,92,000-க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**<u>அலுவலகக்குறிப்பு:—</u>** மேற்படி பணியின் அவசியம் கருதி மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண் 7584/2002/இ2 | அலுவலகக் குறிப்பு அங்கீகரிக் கப்பட்டது. |
| **4** | 628 | உடுமலைப்பேட்டை நகராட்சிக்குச் சொந்தமான மத்திய பேருந்து நிலையத்தில் 2018-2019 முதல் 2020-2021 வரையிலான மூன்று ஆண்டுகளுக்கு சமூக விழிப்புணர்வு மற்றும் விளம்பரம் செய்யும் உரிமத்திற்கு பொதுஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரவும், அதற்காகும் செலவினத்திற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக்குறிப்பு:**<br>1) ஒப்புதல் அளிக்கலாம்.<br>2) ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளிகள் கோர பொது மற்றும் சிறப்பு நிபந்தனைகளை அங்கீகரிக்கலாம்.<br>ந.க.எண் 2315/2018/அ2 | அலுவலகக் குறிப்பு அங்கீகரிக் கப்பட்டது. |
| **5** | 629 | உடுமலைப்பேட்டை நகராட்சிக்குட்பட்ட ஆணையாளர் சுப்பையா வீதியில் புதியதாக கட்டப்பட்டுள்ள கூடுதல் அலுவலகக் கட்டிடத்தின் முன்புறம் புதியதாக Gardening Works செய்வதற்கு ரூ.0.40 இலட்சத்திற்கு மதிப்பீடுகள் தயார் செய்யப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டிற்கு செலவினம் மேற்கொள்ள நிர்வாக அனுமதி வேண்டப்படுகிறது. மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி இந்நகராட்சி பதிவு பெற்ற ஒப்பந்ததாரர் M/s.RSM & Co அவர்களின் மூலம் ஒப்படைப்பு பணியாக மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.<br>**<u>அலுவலகக்குறிப்பு:</u>** மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>ந.க.எண் 2252/2018/இ2 | அலுவலகக் குறிப்பு அங்கீகரிக் கப்பட்டது. |
| **6** | 630 | உடுமலைப்பேட்டை நகராட்சிக்குட்பட்ட சதாசிவம் வீதியில் உள்ள நகராட்சி துவக்கப்பள்ளியில் சில மராமத்து பணி மேற்கொள்ளுதல் பணிக்கு இந்நகர்மன்ற தீர்மான எண்.1911 நாள்: 12.09.2015-ன்படி நிர்வாக அனுமதி பெறப்பட்டு ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் இந்நகர்மன்றத் தீர்மானம் எண்.2033 நாள்: 01.03.2016ல் குறைந்த ஒப்பந்தப்புள்ளி கோரிய திரு.எம்.சுப்பிரமணியம் அவர்களது குறைந்த ஒப்பந்தப்புள்ளியை ஏற்று வேலை உத்திரவு வழங்கப்பட்ட நிலையில் நாளது தேதிவரை பணிகள் துவங்கப்படாமல் உள்ளதால் தற்சமயம் GST நடைமுறைகள் Taxation-ல் பின்பற்றப்படுவதால் மேற்படி பணிக்கு GST 12% பிடித்தம் செய்யப்பட வேண்டும் என்பதாலும் பழைய மதிப்பீட்டில் GST 12% க்கு வழிவகை செய்யப்படாததாலும் மேற்கண்ட பணிக்கு GST 12% தொகை ரூ.27000-னை சேர்த்து ரூ.252000-க்கு திருத்திய மதிப்பீட்டிற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**<u>அலுவலகக்குறிப்பு:</u>** மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>ந.க.எண் 2251/2015/இ1 | அலுவலகக் குறிப்பு அங்கீகரிக் கப்பட்டது. |

| | | | |
|---|---|---|---|
| **7** | 631 | உடுமலைப்பேட்டை நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் பாதாள சாக்கடை திட்டப்பணிகள் முடிவுற்று வீட்டு இணைப்புகள் வழங்கும் பணி நடைபெற்று வருகிறது. இந்நிலையில் பழைய நகரப்பகுதிகளில் பாதாள சாக்கடை குழாய்களில் அடைப்பு ஏற்பட்டு வருவதால் நகராட்சி வசம் பாதாள சாக்கடை திட்டம் ஏற்பளிப்பு செய்யப்படவில்லை. மேற்படி பணியை தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. தற்போது தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், செயற்பொறியாளர் தனது கடிதத்தில் (க.எண்.கோ.உடுமலைப்பேட்டை நகராட்சி/பா.சா.தி.ஒப்படைத்தல்/முவஅ/2018 நாள்:22.06.2018) ஒப்பந்ததாரர் 18.06.2018 முதல் பராமரிப்பு மற்றும் பேணுதல் பணிகளை முற்றிலுமாக நிறுத்தி விட்டார். இதனால் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலைய பகுதியிலிருந்து பொதுமக்களிடம் தொடர்ந்து வந்த புகாரின் அடிப்படையில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் பராமரிப்பு மற்றும் பேணுதல் பணிகளை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டு புகார் குறித்த பிரச்சனை தீர்க்கப்பட்டுள்ளதென தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் பராமரிப்பு மற்றும் பேணுதல் பணிகளை தொடர்ந்து மேற்கொள்ள ஆகும் செலவினங்களை நகராட்சி ஏற்றுக் கொள்ள சம்மதம் தெரிவித்து தீர்மானம் நிறைவேற்றி தருமாறு கேட்டுக் கொண்டுள்ளனர்.<br>மேலும் மேற்படியார் தனது கடிதத்தில் (க.எண்.கோ.உடுமலைப்பேட்டை நகராட்சி/பா.சா.தி.ஒப்படைத்தல்/முவஅ/2018/நாள்:28.06.2018) தெரிவித்துள்ளபடி பராமரிப்பு பணிகள் பராமரிப்பு வாகனங்களான 1). Sewer Jetting Machine – 1 No 2) Manhole cleaning machine – 4 Nos ஆகிய வாகனங்களுக்கு தேவைப்படும் எரிபொருள், காப்பீட்டுத் தொகை, பழுது பார்த்தல் பணி, குளோரின் உள்ளிட்ட ரசாயன பொருட்கள் மற்றும் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் மற்றும் கழிவுநீர் ஊற்று நிலையம் ஆகிய பராமரிப்பு பணிகள் மற்றும் இதர பணிகளுக்குரிய தொகைக்கு தீர்மானம் இயற்றி தருமாறு கோரியுள்ளார். மேற்படி இனங்களுக்கு ஒரு வருடத்திற்கு உத்தேச செலவினம் ரூ.1,01,52,519.00 ஆகுமென உதவி செயற்பொறியாளர், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் அவர்கள் தெரிவித்துள்ளார். எனவே மேற்படி திட்டப்பணிகளை நகராட்சி ஏற்கும் வரை தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள ஆகும் செலவினத் தொகையை வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக்குறிப்பு:–** மன்றம் அனுமதிக்கலாம்.<br>**ந.க.எண் 7584/2002/இ2** | அலுவலகக் குறிப்பு அங்கீகரிக் கப்பட்டது. |
| **8** | 632 | இந்நகராட்சியின் பொதுசுகாதார வாகனம் பொதுசுகாதாரப்பிரிவு வாகனம் எண் TN 78 Y 4870–க்கு தகுதிசான்றிதழ் பெறும்பொருட்:டு வாகனத்தில் உள்ள அனைத்து பழுதுகளை சரிசெய்யும் பணிக்கு ஆகும் உத்தேச செலவினத்திற்கு ஆணையாளர் (ம) தனி அலுவலரின் ஒப்புதல் அனுமதி பெறப்பட்டுள்ளது. பணிகள் மேற்கொள்ளும்பொருட்டு 15.06.2018 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்டுள்ள ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது. | அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்க ப்பட்டது. |

| வ.எண் | விலைப்புள்ளிகள் விபரம் | தொகை |
|---|---|---|
| 1. | மெசர்ஸ் ஜோஸ் தேவசி அன் கோ., பொள்ளாச்சி | ரூ.74890/– |
| 2. | மெசர்ஸ் குருவாயூரப்பன் ஆட்டோ மொபைல்ஸ், உடுமலைப்பேட்டை | ரூ.69500/– |

| | | | |
|---|---|---|---|
| | | வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள மெசர்ஸ் குருவாயூரப்பன் ஆட்டோ மொபைல்ஸ், உடுமலைப்பேட்டை அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**<u>அலுவலகக்குறிப்பு:–</u>** மன்றம் அனுமதிக்கலாம்.<br>**<u>ந.க.எண் 2096/2018/எச்1</u>** | |
| **9** | 633 | இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.28-ல் உள்ள பத்ரகாளியம்மன் லே அவுட் மற்றும் சிங்கப்பூர் நகர் பகுதியில் உள்ள சிறுபாலமானது பாதாள சாக்கடை திட்டப்பணிகள் மேற்கொள்ளப்பட்ட பொழுது சேதமடைந்தால் பொதுமக்களும், வாகன ஒட்டிகளும் மிகுந்த சிரமத்துக்குள்ளாகிறார்கள். எனவே ஏற்கனவே உள்ள சிறுபாலங்களை அகற்றிவிட்டு புதியதாக Pipe culverts அமைப்பதற்கு ரூ.1.65 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டிற்கு செலவினம் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**<u>அலுவலகக்குறிப்பு:–</u>** மேற்படி பணியின் அவசியம் கருதி மன்றம் அனுமதிக்கலாம்<br>**<u>ந.க.எண் 2314/2018/இ1</u>** | அலுவலகக் குறிப்பு அங்கீகரிக் கப்பட்டது. |
| **10** | 634 | நகராட்சியின் 2016-17ம் ஆண்டிற்கான ஆண்டுக்கணக்குகள் திருமதி.எஸ். தாமரைச்செல்வி என்பவர் மூலமாக தயாரிக்கப்பட்டுள்ளது. மேற்படி தணிக்கை ஆண்டிற்கான தணிக்கை முடிக்கப்பட்டு அறிக்கை பெறப்பட்டுள்ளது. மேற்படியார் மூலம் ஆண்டுக்கணக்குகள் தயாரிக்கப்பட்டதற்கான பட்டியல் தொகை ரூ.45000/- (ரூபாய் நாற்பத்தி ஐந்தாயிரம் மட்டும்) வழங்கக் கோரி பட்டியல் பெறப்பட்டுள்ளது.<br>எனவே மேற்படியாருக்கு ஆண்டுக் கணக்குகள் தயாரிக்கப்பட்டதற்கான செலவினம் தொகை ரூ.45000/- (ரூபாய் நாற்பத்தி ஐந்தாயிரம் மட்டும்) வழங்கிட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**<u>அலுவலகக்குறிப்பு:–</u>** மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>(ந.க.எண்.1339/2016/பி1) | அலுவலகக் குறிப்பு அங்கீகரிக் கப்பட்டது. |
| **11** | 635 | உடுமலைப்பேட்டை நகராட்சி, சர்வே வார்டு பி, பிளாக் எண்.12, புதிய நகரளவு எண்.1 (பழைய நகரளவு எண். 21)ல் அமையும் திருத்திய மனைப்பிரிவு ஒப்புதல் கோரி திரு. சி.லட்சுமணன், மற்றும் 6 நபர்கள் நகர் ஊரமைப்பு ஆணையர் சென்னை அவர்களுக்கு விண்ணப்பத்ததின் பேரில், நகர் ஊரமைப்பு ஆணையர் அவர்களின் உத்தரவில் திருத்திய குடியிருப்பு மனைப்பிரிவு வரைபடத்திற்கு ம.வ./ந.ஊ.இ.எண். 21/2007 என எண்ணிடப்பட்டு திருத்திய மனைப்பிரிவு வரைபடத்திற்கு ஏற்கனவே ஒப்புதலளிக்கப்பட்ட குடியிருப்பு மனைப்பிரிவு ம.வ./ந.ஊ.இ.எண். 189/2003–ல் தெரிவித்துள்ள நிபந்தனைகள் யாவும் பொருந்தும் எனவும் திருத்திய மனைப்பிரிவு வரைபடத்தில் அமையும் கூடுதலாக உத்தேசிக்கப்பட்ட சாலைகள் மற்றும் பூங்காவினை உள்ளாட்சி தானமாக பெற்றுக் கொள்ளப்பட வேண்டும் எனவும் உத்திரவிடப்பட்டுள்ளதாக தெரிவித்தும் நகர் ஊரமைப்பு ஆணையர் அவர்களின் உத்தரவின்படி உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறும் தெரிவித்து நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் கோவை அவர்களின் 13.09.2017ம் தேதிய ந.க. 1627/2016/ கோம3, எண்ணிட்ட கடிதம் வரப்பெற்றுள்ளது. | அலுவலகக் குறிப்பு அங்கீகரிக் கப்பட்டது. |

| | | | |
|---|---|---|---|
| | | இதன்படி திருத்திய குடியிருப்பு மனைப்பிரிவில் அமையும் சாலைகள், பூங்கா மற்றும் மூலை முடக்கு திறவிடம் ஆகியவற்றை நகராட்சிக்கு தானசாசனம் மூலம் பதிவு செய்து பெற்றுக் கொண்டு மனுதாரருக்காக இறுதி ஒப்புதல் வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக் குறிப்பு :–** நகர் ஊரமைப்பு ஆணையர் அவர்களின உத்தரவில் தெரிவிக்கப்பட்டபடி திருத்திய குடியிருப்பு மனைப்பிரிவில் அமையும் சாலைகள் மற்றும் பூங்கா, திறவிடம் மூலைமுடக்கு ஆகியவற்றை தானசாசனம் மூலம் பதிவு செய்து பெற்றுக் கொள்ளவும் மனுதாருக்கு திருத்திய மனைப்பிரிவு இறுதி ஒப்புதல் வழங்கலாம்.<br>**(ந.க.எண். 6074/2003/எப்1)** | |
| **12** | 636 | இந்நகராட்சி புதிய அலுவலக கட்டிட கட்டுமான பணிகள் அனைத்தும் முடிவுற்று தற்பொழுது பயன்பாட்டில் உள்ள நிலையில் பொறியாளர் பிரிவு, நகரமைப்பு பிரிவு, பொது சுகாதார பிரிவு, தேர்தல் பிரிவு, பொதுப்பிரிவு மற்றும் வருவாய் பிரிவு ஆகிய பிரிவுகளில் "டிஜிட்டல் கேமரா" பொருத்தும் பணிக்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.40,000/-க்கும், மேற்படி பணியை இந்நகராட்சி பதிவு பெற்ற ஒப்பந்ததாரர் மெசர்ஸ்.ஆர்.எஸ்.எம். அன்டு கோ, உடுமலைப்பேட்டை அவர்கள் மூலம் பணியை மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக்குறிப்பு :** மன்றம் அனுமதி வழங்கலாம்<br>ந,க.எண். 2333/2018/இ1 | அலுவலகக் குறிப்பு அங்கீகரிக் கப்பட்டது. |
| **13** | 637 | இந்நகராட்சி புதிய அலுவலக கட்டிட கட்டுமான பணிகள் அனைத்தும் முடிவுற்று தற்பொழுது பயன்பாட்டில் உள்ள நிலையில் தரைதளம், முதல் தளம் மற்றும் இரண்டாம் தளம் ஆகிய பகுதிகளில் தரை விரிப்புகள் புதியதாக விநியோகம் செய்து கொடுக்கும் பணிக்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.40,000/-க்கும், மேற்படி பணியை இந்நகராட்சி பதிவு பெற்ற ஒப்பந்ததாரர் மெசர்ஸ்.ஆர்.எஸ்.எம். அன்டு கோ, உடுமலைப்பேட்டை அவர்கள் மூலம் பணியை மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக்குறிப்பு :** மன்றம் அனுமதி வழங்கலாம்<br>ந,க.எண். 2333/2018/இ1 | அலுவலகக் குறிப்பு அங்கீகரிக் கப்பட்டது. |
| **14** | 638 | இந்நகராட்சி புதிய அலுவலக கட்டிட கட்டுமான பணிகள் அனைத்தும் முடிவுற்று தற்பொழுது பயன்பாட்டில் உள்ள நிலையில் ஆணையாளர் அறை, பொறியாளர் அறை, உதவி பொறியாளர் அறை, நகர்நல அலுவலர் அறை, நகரமைப்பு அலுவலர் அறை மற்றும் கழிப்பறைகள் -6 ஆகியவற்றிற்கு Door Closes பொறுத்தும் பணி மற்றும் இரண்டு எண்ணிக்கை R.O.Plant சுத்திகரிப்பு கருவிகளை புதிய அலுவலக கட்டிடத்தில் பொருத்தும் பணிக்கும் ஆகும் உத்தேச செலவினம் ரூ.40,000/-க்கும், மேற்படி பணியை இந்நகராட்சி பதிவு பெற்ற ஒப்பந்ததாரர் மெசர்ஸ்.ஆர்.எஸ்.எம். அன்டு கோ, உடுமலைப்பேட்டை அவர்கள் மூலம் பணியை மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக்குறிப்பு :** மன்றம் அனுமதி வழங்கலாம்<br>ந,க.எண். 2333/2018/இ1 | அலுவலகக் குறிப்பு அங்கீகரிக் கப்பட்டது. |
| **15** | 639 | உடுமலைப்பேட்டை நகராட்சியில் திடக்கழிவு மேலாண்மை செயலாக்கம் தொடர்பாக மாதிரி செயல் விளக்க கட்டமைப்பு ஏற்படுத்துவது குறித்து மத்திய மாசு கட்டுப்பாட்டு வாரியம், தமிழ்நாடு மாசு கட்டுப்பாட்டு வாரியம் மற்றும் உடுமலைப்பேட்டை நகராட்சி ஆகிய துறைகள் இணைந்து மாதிரி செயல் திட்டம் ஏற்படுத்துவது குறித்து "Memorandum of Understanding (MoU)" ஏற்படுத்தப்பட்டு, முன் வரைவிற்கு மத்திய மாசு கட்டுப்பாட்டு வாரியம் கடிதம் எண்.B19012/15/MSW/PCB/2004 Dated:10.12.2004-ல் நிர்வாக அனுமதி அளிக்கப்பட்டு திட்டம் செயல்படுத்தப்பட்டது.<br>மேற்படி செயல்படுத்தப்பட்டுள்ள திட்டத்தில் "Memorandum of Understanding (MoU)"-ல் தெரிவித்துள்ளவாறு "Land Fill Site" நிதிநிலைமை மற்றும் | அலுவலகக் குறிப்பு அங்கீகரிக் கப்பட்டது. |

| | | | |
|---|---|---|---|
| | | தேவையான இடம் கிடைக்கப் பெறாத காரணத்தால் ஏற்படுத்த முடியாமல் நிலுவையில் உள்ளதால் முன்மாதிரி திட்டம் முழுவதும் செயல்படுத்த முடியாமல் உள்ளது. இது தொடர்பாக Controller and Audit General of India (CAG) அவர்களால் தணிக்கை எண்.27/2014 பத்தி எண்.6.4-ல் தணிக்கை எழுப்பப்பட்டு உள்ளதால் மத்திய மாசு கட்டுப்பாட்டு வாரியத்தால் மேற்படி “Land Fill Site” பணிகள் உடன் முடித்து அறிக்கை சமர்ப்பிக்க 17.11.2017 அன்று நடைபெற்ற ஆய்வுக்கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது. அதனை தொடர்ந்து தமிழ்நாடு மாசு கட்டுப்பாட்டு வாரியம், திருப்பூர் (தெற்கு) அவர்களின் கடிதம் எண்.F.MSW/DEE/TNPCB/TPS/2018 Dated: 12.03.2018-ல் மேற்படி “Landfill site” அமைப்பது தொடர்பாக திடக்கழிவு மேலாண்மைத் திட்டம் விதிகள் 2016-ல் குறிப்பிட்டுள்ளவாறு “State Environment Impact Assessment Authority (SEIAA)-யிடமிருந்து உரிய சுற்றுச்சூழல் அனுமதி (Environmental Clearance) பெற தெரிவிக்கப்பட்டது.<br>எனவே திடக்கழிவு முன் மாதிரி திட்டம் முழுவதும் செயல்படுத்தப்பட வேண்டிய அவசியத்தை முன்னிட்டு தற்போது திடக்கழிவு மேலாண்மைத் திட்டப் பணிகள் செயல்படுத்தப்பட்டு வரும் கணபதிபாளையம் உரக்கிடங்கு பகுதியிலேயே தற்போதைக்கு திடக்கழிவு நிலப்பரப்பு தளம் (Landfill site) அமைக்க முதற்கட்டமாக SEIAA-யிடமிருந்து சுற்றுச்சூழல் அனுமதி (Environmental Clearance) பெற வேண்டியுள்ளது. அதற்காக “Ministry of Environment, Forest and Climate Change” Notification Dated: 03.03.2016 Section-13-ல் தெரிவித்துள்ளவாறு SEIAA-யிடமிருந்து சுற்றுச்சூழல் அனுமதி பெற NABET (National Accrediatation Board for Education and Training) அங்கீகாரம் பெற்ற சுற்றுச்சூழல் தனி ஆலோசக நிறுவனங்களிடமிருந்து (Environmental Consultant Organization) ஒப்பந்தப்புள்ளிகள் பெற்று நியமிக்கப்பட வேண்டியுள்ளது.<br>எனவே திடக்கழிவு மேலாண்மை செயல் திட்டத்தினை முழுமைப்படுத்தப்பட வேண்டிய அவசியம் கருதி உரிய ஒப்பந்தப்புள்ளிகள் கோரி சுற்றுச்சூழல் தனி ஆலோசக நிறுவனம் மூலம் “Land Fill Site” -க்கான சுற்றுச்சூழல் அனுமதியினை உரிய கருத்துருக்களை SEIAA-க்கு சமர்ப்பித்து அனுமதி பெறவும், தனி ஆலோசக நிறுவனத்திற்கு ஆலோசக பணி கட்டணம் உத்தேசமாக ஆகும் செலவினம் ரூ.5.00 இலட்சத்திற்கும் (ரூபாய் ஐந்து இலட்சம் மட்டும்) மற்றும் மேற்படி சுற்றுச்சூழல் அனுமதி பெற SEIAA-க்கு செலுத்தப்பட வேண்டிய தெரிவிக்கப்படும் கட்டணத்திற்கும் மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.<br>**<u>அலுவலகக்குறிப்பு :</u>**<br>1. மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>2. மேற்படி செலவினத்தினை பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>**ந.க.எண்.2497/2004/இ1** | |
| **16** | 640 | திருப்பூர் மாவட்டம் அருள்மிகு அமணலிங்கேஸ்வரர் திருக்கோயிலில் வருடந்தோறும் ஆடிப்பெருந்திருவிழாவினை முன்னிட்டு ஒவ்வொரு வருடமும் அரசு விழாவாக கொண்டாடப்பட்டு வருகிறது. இந்நிலையில் இந்த வருடமும் வருகிற ஆகஸ்ட் மாதம் 3ஆம் தேதியன்று ஆடிப்பெருந்திருவிழா நடத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகிறது. எனவே மேற்கண்ட ஆடிப்பெருந்திருவிழாவிற்கு ஒவ்வொரு வருடமும் உடுமலைப்பேட்டை நகராட்சி சார்பில் தற்காலிக கழிப்பிடம் மற்றும் சிறுநீர் கழிப்பறைகள் போன்றவைகள் அமைத்து கொடுக்கப்பட்டு வருகிறது. எனவே இந்த வருடமும் மேற்கண்ட பணியினை மேற்கொள்ளும் பொருட்டு ரூ.0.40 இலட்சத்திற்கு (ரூபாய் நாற்பதாயிரம் மட்டும்) மதிப்பீடுகள் தயார் செய்யப்பட்டுள்ளது. மேலும் மேற்கண்ட பணியானது அரசு விழாவாக உள்ளதாலும், பணியின் அவசர அவசியம் கருதியும் ஒப்படைப்பு பணியாக நகராட்சி பதிவு பெற்ற ஒப்பந்ததாரர் திரு.ஏ.சாகுல் அமீது அவர்கள் மூலம் மேற்கொள்ளுவதற்கும் உரிய நிர்வாக அனுமதி பெறும் பொருட்டு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.<br>**<u>அலுவலகக்குறிப்பு :</u>** மன்றம் அனுமதி வழங்கலாம்<br>**ந.க.எண்.2451/2018/இ1** | அலுவலகக் குறிப்பு அங்கீகரிக் கப்பட்டது. |

| | | | |
|---|---|---|---|
| **17** | 641 | உடுமலைப்பேட்டை நகராட்சிக்கு சொந்தமான மத்திய பேருந்து நிலையத்திலுள்ள மழைநீர் வடிகாலானது முற்றிலுமாக சேதமடைந்துள்ளதால் பொதுமக்கள் மற்றும் பேருந்து நிலையத்திற்கு வரும் பயணிகள் பாதிக்கப்படுவதுடன் நகராட்சிக்கும் அவப்பெயர் ஏற்படுகிறது. மேலும் நகராட்சிக்கு சொந்தமான அண்ணா பூங்கா அருகில் Onsite Compost Yard-க்கு ஏற்கனவே தொட்டி உள்ளதால் மேற்கூரை மட்டும் அமைப்பதற்கும் மற்றும் மத்திய பேருந்து நிலையத்தில் உள்ள மழைநீர் வடிகாலினை மராமத்து பணிகள் செய்வதற்கும் ரூ.0.40 இலட்சத்திற்கு (ரூபாய் நாற்பதாயிரம் மட்டும்) மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டிற்கு உரிய நிர்வாக அனுமதி வேண்டப்படுகிறது. மேலும் மேற்கண்ட பணியின் அவசர அவசியம் கருதி ஒப்படைப்பு பணியாக நகராட்சி பதிவு பெற்ற ஒப்பந்ததாரர் திருவாளர்கள்.ஆர்.எஸ்.எம் அன்டு கோ, உடுமலைப்பேட்டை அவர்கள் மூலம் மேற்கொள்வதற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**<u>அலுவலகக்குறிப்பு :</u>** மன்றம் அனுமதி வழங்கலாம்<br>**ந.க.எண்.2450/2018/இ1** | அலுவலகக் குறிப்பு அங்கீகரிக் கப்பட்டது. |
| **18** | 642 | நகராட்சிக்கு சொந்தமான ஈப்பு வாகனம் எண். டிஎன்.78 ஒய் 4705 இன்ஜின் ஆயில் சர்வீஸ் மற்றும் வைப்பர்கள் சர்வீஸ் செய்தல், ஜெனரல் செக்கப் செய்து கொள்ள அங்கீகாரம் பெற்ற பணிமனை CAI INDUSTRIES பொள்ளாச்சி மூலம் பணிகள் மேற்கொள்ளவும் அதற்காகும் உத்தேச செலவினம் ரூ.13000/–க்கு மன்றம் அனுமதிக்கலாம். பணியின் அவசர அவசியத்தினை முன்னிட்டு தனி அலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று பணிகள் மேற்கொண்டதையும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக்குறிப்பு – அனுமதிக்கலாம்.<br>**(ந.க.எண்.2385/2018/இ2)** | அலுவலகக் குறிப்பு அங்கீகரிக் கப்பட்டது. |
| **19** | 643 | நகராட்சிக்கு சொந்தமான ஈப்பு வாகனம் எண். டிஎன்.78 டி 8087 ஆயில் சர்வீஸ் மற்றும் பில்டர்கள் மாற்றி ஜெனரல் செக்கப் செய்து கொள்ள அங்கீகாரம் பெற்ற பணிமனை CAI INDUSTRIES பொள்ளாச்சி மூலம் பணிகள் மேற்கொள்ளவும் அதற்காகும் உத்தேச செலவினம் ரூ.5000/–க்கு மன்றம் அனுமதிக்கலாம். பணியின் அவசர அவசியத்தினை முன்னிட்டு தனி அலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று பணிகள் மேற்கொண்டதையும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக்குறிப்பு – அனுமதிக்கலாம்.<br>ந.க.எண்.2277/2018/இ2 | அலுவலகக் குறிப்பு அங்கீகரிக் கப்பட்டது. |
| **20** | 644 | இந்நகராட்சி பகுதியில் பாதாள சாக்கடை திட்டப்பணிகள் முடிவுற்று, தற்போது விரிவான திட்ட அறிக்கையில் தெரிவித்துள்ளவாறு (DPR) 12500 எண்ணிக்கை கொண்ட வீடு மற்றும் வணிக இணைப்பு வழங்கும் பணிகள் நடைபெற்று வருகிறது. இந்நிலையில் மேற்படி வீட்டு இணைப்பு பணிகள் சம்பந்தமாக வரக்கூடிய விண்ணப்பங்களை பிரித்து பதிவேடுகளில் பதிவு செய்யவும், முன்னுரிமைப் பட்டியல்கள் தயார் செய்து உரிய உத்திரவு வழங்குவதற்கும், அவ்வப்போது கணிணியில் ஏற்றம் செய்யவும் மற்றும் முன் வைப்புத்தொகை செலுத்துவது தொடர்பாக அறிவிப்புகள் தயார் செய்து வழங்கவும் தேவையான இளநிலை எழுத்தர்கள் இந்நகராட்சியால் இல்லாத காரணத்தால் திருப்பூர் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் 2016–2017 தரப்படுத்தப்பட்ட விலை அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள விலை விகிதங்களின்படி 2 எழுத்தர்களை (கல்வித்தகுதி – $12^{th}$ மற்றும் அதற்கு மேல்) தற்காலிக ஒப்பந்த அடிப்படையில் (251x 2xரூ.388.00) ஆகஸ்ட்– 2018 முதல் ஏப்ரல்– 2019 வரை (ஒன்பது மாத காலத்திற்கு) பணியமர்த்தி கொள்ளவும், அதற்காகும் உத்தேச மதிப்பீடு ரூ.1.95 இலட்சத்திற்கு, மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலர், உடுமலைப்பேட்டை நகராட்சி அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதை மன்றம் அனுமதிக்கலாம்.<br>**<u>அலுவலகக்குறிப்பு:–</u>** மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>ந.க.எண்.2277/2018/இ3 | அலுவலகக் குறிப்பு அங்கீகரிக் கப்பட்டது. |

**21** | 645

உடுமலைப்பேட்டை நகராட்சிக்கு சொந்தமான குடிநீர் லாரி எண்.TN 78X 6177-ல் ஏற்பட்டுள்ள பழுதுகளை சரிசெய்து தகுதிச்சான்று பெறும் பணிக்கு அரசு அங்கீகாரம் பெற்ற பணிமனைகளிலிருந்து விலைப்புள்ளி பெற்றதில் கீழ்க்கண்ட விபரப்படி இரண்டு விலைப்புள்ளிகள் வரப்பெற்றதை மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்பட்டுள்ளது.

| வ.எண் | விலைப்புள்ளி கொடுத்த நிறுவனத்தின் பெயர் | விலைப்புள்ளி தொகை |
|---|---|---|
| 1. | M/s.Guruvayurappan Automobiles, Udumalpet | ரூ.44000.00 |
| 2. | M/s.P.B.Sheriff Auto Diesel Works, Pollachi | ரூ.46150.00 |

**அலுவலகக்குறிப்பு :**

1. வரப்பெற்ற இரண்டு விலைப்புள்ளிகளில் ரூ.44000/–க்கு குறைந்த விலைப்புள்ளி வழங்கியுள்ள M/s.Guruvayurappan Automobiles, Udumalpet அவர்களின் விலைப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.
2. வாகன உபயோகத்தின் அவசியம் கருதி தனி அலுவலர் மற்றும் ஆணையாளர் (கூ.பொறுப்பு), உடுமலைப்பேட்டை நகராட்சி அவர்களின் முன்அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கி பணி மேற்கொண்டதை மன்றம் அங்கீகரிக்கலாம்

**ந.க.எண். 1935/2018/இ2**

அலுவலகக் குறிப்பு அங்கீகரிக் கப்பட்டது.

**22** | 646

இந்நகராட்சிக்குட்பட்ட டிவி பட்டிணம் மேல்நிலை நீர்தேக்க தொட்டியில் அமைக்கப்பட்டுள்ள Electro Chlorinator-ல் உள்ள Hypo Pump மற்றும் அதில் பொருத்தப்பட்டுள்ள சென்சார்களில் ஏற்பட்டுள்ள பழுதுகளை சரிசெய்யும் பணிக்கு பணிமனைகளிலிருந்து விலைப்புள்ளி பெற்றதில் கீழ்க்கண்ட விபரப்படி ஆறு விலைப்புள்ளிகள் வரப்பெற்றதை மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்பட்டுள்ளது.

**1). 30 LPH Hypo pump and Float Sensor**

| வ.எண் | விலைப்புள்ளி கொடுத்த நிறுவனத்தின் பெயர் | விலைப்புள்ளி தொகை |
|---|---|---|
| 1. | M/s.Athavan Traders, Velampalayam, | ரூ.13570.00 |
| 2. | M/s.Senthilmurugan & Co, Erode | ரூ.13833.00 |
| 3. | M/s.Karvembu & Co, Muthur | ரூ.14033.00 |

**2). PMD-15 LPM Sealless Magnetic Pump set**

| வ.எண் | விலைப்புள்ளி கொடுத்த நிறுவனத்தின் பெயர் | விலைப்புள்ளி தொகை |
|---|---|---|
| 1. | M/s.Athavan Traders, Velampalayam | ரூ.13943.00 |
| 2. | M/s.Senthilmurugan & Co, Erode | ரூ.14865.00 |
| 3. | M/s.Karvembu & Co, Muthur | ரூ.14588.00 |

**அலுவலகக்குறிப்பு :**

1. வரப்பெற்ற ஆறு விலைப்புள்ளிகளில் ரூ.13570/– மற்றும் ரூ.13943/–க்கு குறைந்த விலைப்புள்ளி வழங்கியுள்ள M/s.Athavan Traders, Velampalayam அவர்களின் விலைப்புள்ளிகளை மன்றம் ஏற்கலாம்.
2. பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலர் மற்றும் ஆணையாளர் (கூ.பொறுப்பு), உடுமலைப்பேட்டை நகராட்சி அவர்களின் முன்அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கி பணி மேற்கொண்டதை மன்றம் அங்கீகரிக்கலாம்

**ந.க.எண். 1075/2018/இ2**

அலுவலகக் குறிப்பு அங்கீகரிக் கப்பட்டது.

<table>
<tr><td>23</td><td>647</td><td>இந்நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் பாதாள சாக்கடை திட்டப்பணிகளில் வீட்டுக் குழாய் இணைப்புகள் வழங்கும் பணிகள் மற்றும் ஆள்நுழைக்குழிகள் கட்டமைப்பு பணிகள் நடைபெற்று வருகிறது. இந்நிலையில் மேற்படி பணி தொடர்பாக பொதுமக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்திட ஏதுவாக நகரின் முக்கிய இடங்களில் Flex Banner-கள் அமைத்திட உத்தேச செலவினம் ரூ.10000-க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><u>அலுவலகக்குறிப்பு:–</u> மேற்படி பணியின் அவசியம் கருதி மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண் 10115/2017/இ1</td><td>அலுவலகக் குறிப்பு அங்கீகரிக் கப்பட்டது.</td></tr>
<tr><td>24</td><td>648</td><td>இந்நகராட்சியில் மேற்கொள்ளப்பட்டு வந்த குடிநீர் அபிவிருத்தி பணிகள் JICA 2013-2014, IUDM 2013-2014 (ம) புதிய அலுவலக கட்டிடம் கட்டுமானப் பணிகள் அனைத்தும் முடிவுற்று தற்பொழுது பயன்பாட்டிற்கு கொண்டு வர உள்ளமையால் தமிழக முதலமைச்சர் அவர்களால் காணொலி மூலம் 04.05.2018 அன்று திறந்து வைக்க ஏதுவாக திறப்பு விழா ஏற்பாடுகள் ELCOT நிறுவனம், சென்னை மூலம் மேற்கொள்ளப்பட்டதற்கு பட்டியல் தொகையாக ரூ.3,60,591/- வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><u>அலுவலகக்குறிப்பு:–</u> மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண். 8082/2017/இ1</td><td>அலுவலகக் குறிப்பு அங்கீகரிக் கப்பட்டது.</td></tr>
<tr><td>25</td><td>649</td><td>2018 – 2019 முதல் 2020 – 2021 வரையிலான உடுமலைப்பேட்டை நகராட்சிக்குட்பட்ட மத்திய பேருந்து நிலையத்தினுள் தொ□ காட்சி வைத்து சமூகவிழிப்புணர்வு மற்றும் விளம்பரம் செய்யும் உரிமத்திற்கான ஏலம் 11.07.2018 அன்று நடைபெற்றதில் பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், வரப்பெற்ற ஏலக்கேள்வி / ஒப்பந்தப்புள்ளி கீழ்கண்டவாறு,
<table>
<tr><th>வ.எண்</th><th>ஏலக்கேள்வி / ஒப்பந்தப்புள்ளி கோரியவர் பெயர் மற்றும் விபரம்</th><th>ஒரு வருட வாடகை ( ரூ.)</th></tr>
<tr><td>1.</td><td>திரு. ர.ராகுல்தேவ்,<br>த/பெ. ரமேஷ்குமார்,<br>எண் 6, யு.கே.பி.வீதி, உடுமலைப்பேட்டை.</td><td>ரூ. 66,000</td></tr>
</table>
நகராட்சி மத்திய பேருந்து நிலையத்தில் தொ□ காட்சி வைத்து சமூகவிழிப்புணர்வு மற்றும் விளம்பரம் செய்ய திரு. ர.ராகுல்தேவ் என்பவர் ஒரு ஆண்டிற்கு ஏலக்கேள்வி ரூ.66,000 /- ஏலம் கோரியுள்ளார். மேலும், உடுமல□ நகராட்சியில் இவ்வினம் புதிதாக உருவாக்கப்படவுள்ளது. மேற்படி இடத்தில் குத்தகை உரிமம் பெறுபவரே அவர்தம் சொந்த செலவில் பராமரிப்புப் பணி செய்து பயன்படுத்திக்கொள்ள வேண்டும். இக்கடையின் மூலம் நகராட்சிக்கு கூடுதல் வருவாய் வரவுள்ளதால் திரு. ர.ராகுல்தேவ் என்பவரின் உயர்ந்த பட்ச ஏலக்கேள்வியினை மன்றம் ஏற்கலாம்.<br>அலுவலகக்குறிப்பு:–<br>1. மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>2. மேற்படி நகராட்சி மத்திய பேருந்து நிலைய உட்புறத்தில் புதிதாக உருவாக்கப்பட்டுள்ள இவ்வினம் மூ□ம் நகராட்சிக்கு கூடுதல் வருமானம் வரவுள்ளதால் அதிகபட்ச ஏலக்கேள்வி கோரியுள்ளோரின் ஏலக்கேள்வியினை மன்றம் ஏற்று குத்தகை உரிமம் வழங்கலாம்.<br>ந.க.எண் 2315/2018/அ2</td><td>அலுவலகக் குறிப்பு அங்கீகரிக் கப்பட்டது.</td></tr>
</table>

| | | | |
|---|---|---|---|
| **26** | 650 | மாவட்ட ஆட்சியர் திருப்பூர் அவர்களின் உத்திரவின்படியும் நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் கோவை அவர்களின் தொலைபேசி செய்தியில் தெரிவிக்கப்பட்டபடி **23.06.2018** மற்றும் **27.06.2018** ஆகிய இரு நாட்கள் நடைபெறும் அனுமதியற்ற மனைப்பிரிவில் உள்ள மனைகளை முறைப்படுத்துதல் முகாமிற்கு தேவையான பணிகள் செய்ய விலைப்புள்ளி கோரப்பட்டவர்களிடமிருந்து கீழ்க்காண் விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது.<br><br>**1. 4800 சதுரஅடி அளவில் PVC பந்தல் அடப்பு மற்றும் கியூ தடுப்பு அமைக்கும் பணிக்கு வரப்பெற்ற விலைப்புள்ளிகள்**<br>1. பந்தல்ராஜா சிங்கப்பூர் நகர் உடுமைை ரூ. 80,000/–<br>2. ஜம்ஜம் பந்தல் டெக்கரேட்டர் கௌஸ்காலனி ரூ. 85,000/–<br>3. மின்னல் பாய்ஸ் சிங்கப்பூர் நகர் உடுமலை ரூ. 70,000/–<br><br>**2. சேர், டேபிள், ஜமுக்காளம் ஆகியவற்றை வாடகைக்கு எடுத்தல் வரப்பெற்ற விலைப்புள்ளிகள்**<br>1. சீதா ஒலியகம் 226 தளி ரோடு உடுமலை ரூ. 23,000/–<br>2. பாத்திர வாடகை ஸ்டோர் ராமசாமி நகர் உடுமலை ரூ. 22,500/–<br>3. அமுதா வாடகை பாத்திர ஸ்டோர் ரூ. 18,650/–<br><br>**3. ஒலி ஒளி அமைக்க வரப்பெற்ற விலைப்புள்ளிகள்**<br>1. பாரதி சவுண்ட்ஸ் ஜக்கம்பாளையம் ரூ. 16,500/–<br>2. சாந்திநாதன் சவுண்ட்ஸ் சரவணா வீதி ரூ. 15,500/–<br>3. குமரன் சவுண்ட்ஸ் பெரிய கடை வீதி ரூ. 12,800/–<br><br>**4. விளம்பரபலகை (Flex) அமைக்க வரப்பெற்ற விலைப்புள்ளிகள்**<br>1. டீஜிடல் டிசைன்ஸ் ரூ. 13,728/–<br>2. ஐ மீடியா , சிவசக்தி காலனி ரூ. 14,876/–<br>3. Colors Flex & LED ரூ. 13,095/–<br><br>**5. ஆ;டடோ மூலம் விளம்பரம்படுத்த வரப்பெற்ற விலைப்புள்ளிகள்**<br>1. பாரதி சவுண்ட்ஸ் (1 நாள் வாடகை ) ரூ. 17,50/–<br>2. குமரன் சவுண்ட்ஸ் ரூ. 1800/–<br>3. மணி ஆட்டோ விளம்பரம் ரூ. 1500/–<br><br>**5. படிவங்கள், பேட்ஜ், டோக்கன், Receipt Pad. ஆகியவை அச்சடித்து வழங்க வரப்பெற்ற விலைப்புள்ளிகள்**<br>1. கிருஷ்ணா அச்சம் ரூ. 7200/–<br>2. அழகு பிரிண்டர்ஸ் ரூ. 7500//–<br>3. சாயி கராபிக்ஸ் பெரிய கடை வீதி உடுமலை ரூ. 6,850/– | அலுவலகக் குறிப்பு அங்கீகரிக் கப்பட்டது. |

<table>
<tr>
<td></td>
<td></td>
<td>
வரப்பெற்ற மேற்காண் விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளியாக வரப்பெற்ற கீழ்க்காண் விலைப்புள்ளிகளை அவசர அவசியத்தை முன்னிட்டு மன்ற முன் அனுமதியுடன் ஏற்க உத்தரவு வேண்டப்படுகிறது.
<table>
<tr><td>1</td><td>மின்னல் பாய்ஸ் (PVC ) பந்தல் அமைக்க)</td><td>ரூ.70000/–</td></tr>
<tr><td>2.</td><td>அமுதா பாத்திர வாடகை ஸ்டோர்ஸ் ( சேர் டேபிள்)</td><td>ரூ.18650/–</td></tr>
<tr><td>3.</td><td>குமரன் சவுண்ட்ஸ் (ஒலி ஒளி)</td><td>ரூ.12800/–</td></tr>
<tr><td>4.</td><td>Colors Flex LED (Flex)</td><td>ரூ.13095/–</td></tr>
<tr><td>5.</td><td>மணி ஆட்டோ விளம்பரம் ( 6 நபர்கள்)</td><td>ரூ.9000/–</td></tr>
<tr><td>6.</td><td>சாயி கிராபிக்ஸ் ( படிவம், பேட்ஜ், டோக்கன்)</td><td>ரூ.6850/–</td></tr>
</table>
அலுவலகக் குறிப்பு :– மன்றம் அனுமதி வழங்கலாம்.
</td>
<td></td>
</tr>
</table>

(ஒப்பம்) கே.எம். சுதா,
ஆணையாளர்(கூ.பொ) / தனி அலுவலர்

**ஆணையாளர்(கூ.பொ)**
**உடுமலைப்பேட்டை நகராட்சி**